மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 39/2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : லீனா (வா.சா.2) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

01.12.2025

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை –</u>

நான் 5ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் அடுப்பு கரி வியாபாரம் செய்து வருகிறேன். ஜமால் பீவியின் கணவரும் அடுப்பு கரி வியாபாரம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. ஜமால் பீவி ஆடு மேய்த்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. ஜமால் பீவியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனக்கு ஜமால் பீவியை தெரியாது. 1ம்பிரதிவாதி பெரியாம்பிள்ளை எனக்கு என்ன உறவுமுறை என்றால் பெரியம்மா மக்கள் ஆவார். பூசாரி, வேல்முருகன், கருப்பன் ஆகியோர்கள் எனக்கும் பெரியாம்பிள்ளைக்கும் சொந்தக்காரர்கள் ஆவார்கள். பூசாரி, வேல்முருகன், கருப்பன் ஆகியோர்களிடமிருந்து பெரியாம்பிள்ளை தபசில் சொத்தை கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெரியாம்பிள்ளைக்கு தபசில் சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் மேற்படி மூவரும் எழுதிக் கொடுத்ததாக பெரியாம்பிள்ளை சொன்னார். எந்த வருடம் எழுதி கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்கு 2வருடம் கழித்து பெரியாம்பிள்ளை அவர்களிடமிருந்து விடுதலை பத்திரம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு அக்கம் பக்கத்தில் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. வில்லங்கச் சான்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு எவ்வளவு நாட்களுக்கு முன்பு வில்லங்கச் சான்று பார்த்தேன் என்றால் எனது கணவருக்கு தான்தெரியும். நான் கிரையம்வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை நேரில் சென்று பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அப்போது வாதி தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் இல்லை, காலியாக தான் இருந்தது.

நான் கிரையம் வாங்கிய பிவாசாஆ6 ஆவணத்தில் பெரியாம்பிள்ளை பூசாரி வகையறாவிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றதாக குறிப்பிடப்ட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பிவாசாஆ6 பற்றி எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் ஆமாம். தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்பு பட்டா மாற்ற மனு கொடுத்தேனா என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். தாவா சொத்தை கிரையம் பெறும்போது பெரியாம்பிள்ளை அவர் கிரையம் பெற்றதாகவோ, விடுதலை பத்திரம் செய்ததாகவோ ஆவணம் எதுவும் கொடுத்தாரா என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். தாவா சொத்தை கிரையம் பெறும்போது வாதி அதில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றும் நான் வழக்கிற்காக காலியாக இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டா வாதி பெயரில் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். நான் இந்த வழக்கில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல்செய்துள்ளேனா என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். வாதி என்ன சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். நானும், பூசாரி வகையறாவும், பெரியாம்பிள்ளையும் சேர்ந்து கொண்டு வாதிக்கு இடைஞ்சல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கு நடக்கும்போது தாவா இடத்தை சென்று பார்த்தபோது வாதி அதில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். தாவா வழக்கிற்கு எதிர்வழக்குரை போட்டுள்ளேனா என்றால் நான் வேறு மாநிலத்தில் குடியிருந்து வருவதால் எனது கணவருக்கு தான் தெரியும். கர்நாடாகாவில் பெங்களூரில் 30 வருடமாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தில் எனக்கு எந்த பாத்தியம்அனுபவம் இல்லை என்றாலும் வம்பாக உள்ளது என்று சொல்லி வருகிறோம் என்றால் சரியல்ல. பிவாசாஆ6 ஆவணத்தின் படி தாவா சொத்தில் எனக்கு எந்தவித அனுபவமும் உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.